RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22230

OPEN ACCESS

# கி.ரா வின் படைப்புகளில் கரிசல் பண்பாட்டுக் கூறுகள்

இரா. இராஜசேகர் [அ, *], வே. தனுஜா [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீ.எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Components in Karisal Region in the works of K.Ra

R. Rajasekar [a, *], V. Dhanuja [a]

[a] Department of Tamil, Sri S.Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: rajasekarrajamannar@gmail.com

Received: 17-01-2022
Revised: 10-04-2022
Accepted: 18-04-2022
Published: 30-04-2022

**ABSTRACT**

Among the literary personalities of Tamil language K. Ra (K.Rajanarayanan) has won a good place in people's minds through his works. K. Rajanarayanan lived in Karisal region created literary works based on the karisal region. He documented the traditions and cultural aspects of the Karisal land people through his works. He called himself as a vernacular artist and his works are very unique. This article explains about the beliefs, customs, rituals, weddings, festivals, worships and practices followed in the Karisal land and it expresses their culture.

**Keywords:** Rajanarayanan, Karisal Region, Worship, Rituals

## முன்னுரை

மக்களுடன் இரண்டறக் கலந்ததாகப் பண்பாடு விளங்குகிறது. மக்களின் வாழ்வில் வெளிப்படும் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்குகள், திருமண முறைகள், திருவிழாக்கள், வழிபாடுகள், வழக்காறுகள் முதலியவை பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. ஓர் இனத்தில் கூறுகள், அந்த இனத்தின் மதிப்பை அறிய உதவுகின்றன. ஒரு சமூகத்தை இனங்காணத் துணைபுரிகின்றன. இத்தகைய பண்பாட்டு விழுமியங்களைச் சித்தரிக்கும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. அந்தவகையில் கரிசல் வட்டார மக்களின் வாழ்வில் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள் பற்றிக் காண்போம்.

### கரிசல் வட்டாரப் பண்பாட்டுக் கூறுகள்

ஒரு தனிப்பட்ட சமூகத்தின் இனவரைவியலை அறியத் துணைபுரியும் அடிப்படையான கூறுகளில், 1) நம்பிக்கைகள், 2) சடங்குகள், 3) வழிபாடுகள், 4) திருமண முறைகள், 5) வழக்காறுகள், முதலியவை சிறப்பிடம் பெறுகின்றன. கரிசல் வட்டார மக்களின் பண்பாட்டு வாழ்க்கை இக்கூறுகளின் மூலம் சித்திரிக்கப்படுகின்றன. (Subramaniyan, 2014)

### நம்பிக்கைகள்

மக்களால் உருவாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றை நம்பிக்கை எனலாம். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் இன்றியமையாத கூறாக நம்பிக்கை விளங்குகிறது.

மனித வாழ்க்கை நம்பிக்கையின் மேலேயே பயணம் செய்கிறது. 'நன்மையின் பால் உள்ள ஆர்வமும் தீமையின் பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. கரிசல் வட்டார மக்களின் நம்பிக்கைகள் இதன்அடிப்படையிலே அமைந்துள்ளன. 1. காரணகாரிய நம்பிக்கைகள், 2. மருத்துவம் சார்ந்த நம்பிக்கைகள், 3. தெய்வ நம்பிக்கைகள், 4. மந்திர நம்பிக்கைகள், 5. ஆவியுலக நம்பிக்கைகள் (Gnanasekaran, 2000) என அம்மக்களின் நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன.

## சடங்குகள்

மனித நம்பிக்கையின் வெளிப்பாடுகளே சடங்குகள் எனலாம். பிறப்பு இறப்பு வரையிலான வாழ்வின் அனைத்து நிகழ்வுகளிலும் சடங்குகள் இடம்பெறுகின்றன.

'நம்பிக்கைகள் கருத்து வடிவம் கொண்டவை: சடங்குகள் செயல் வடிவம் கொண்டவை. நம்பிக்கைகள், செயல் வடிவம் பெறுகையில் சடங்கு வடிவத்தை அடைகின்றன எனலாம். வழக்கில் உள்ள அனைத்துச் சடங்களிலும் நம்பிக்கைகளே அதன் முன் வடிவமாகத் திகழ்கின்றன (Bakthavatchala Bharathi, 2011).

மரபு வழிப்பட்டும், புறச் செயல்களைக் கொண்டும் விளங்கும் சடங்குகள், மனித வாழிவில் பெரும்பங்கு வகிக்கின்றன. 'சடங்கு சூழ இருப்பவர்களை இணைக்கும் பந்தம் என்றும், இப்பந்தம் இல்லாவிடின் இணைப்பு அறுந்து போய்விடும்' என்றும் கூறுவர்.

இக்கூற்றின்படி கரிசல் வட்டார மக்களின் பண்பாட்டின்படி வழங்கும் சடங்குகள். 1. வழிப்பாட்டுச் சடங்குகள், 2. வளமைச் சடங்குகள், 3. வாழ்வியல் சடங்குகள் என வகைப்படுத்தப்படுகினறன. (Gnanasekaran, 2000).

## வழிப்பாட்டுச் சடங்குகள்

கரிசல் வட்டார மக்களின் பண்பாட்டின்படி வழிபாட்டு முறையில் நம்பிக்கையை வெளிப்படுத்தும் முகமாகச் சடங்குகள் அமைந்துள்ளன. தெய்வத்தின் மீதுள்ள பயம், மரியாதை, நம்பிக்கை முதலானவை அச்சடங்களுக்குக் காரணங்களாகின்றன.

தெய்வ வழிபாட்டோடு ஒன்றியவையாக விளங்கும் விழாக்கள், பண்டிகைகள் முதலியவற்றோடு சடங்குகள் இணைந்தவையாக உள்ளன.

விழாக்களுக்கு அடிப்படையாக சடங்குகள் திகழ்ந்துள்ளன எனவும், வாழ்வியல் நிகழ்ச்சிகளுக்கும் சடங்குகளே அடிப்படையாக இருந்துள்ளன.

ஏதாதசி, புரட்டாசி கடைசி சனி, ஆடி கடைசி வெள்ளி, பங்குனி உத்திரம், ஆயுத பூஜை சரஸ்வதி பூஜை முதலிய சமயத் தொடர்பான விழா நாட்களில் தெய்வத்திற்கு நோன்பு இருந்து ஒருவேளை மட்டும் உணவு உண்ணும் கரிசல் மக்கள், இவ்விழா நாட்களில் சடங்குகள் நிகழ்த்தி விழாவினைக் கொண்டாடுகின்றனர் (Gnanasekaran, 2000).

விழாக்காலங்களில் தெய்வங்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளும் நம்பிக்கைகளும். அதைச் சார்ந்த சடங்கு முறைகளும் கரிசல் வட்டார மக்களின் பண்பாட்டுச் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

## வளமைச் சடங்குகள்

வளமும் செழிப்பும் பெற வேண்டி செய்யப்படும் சடங்குகள் வளமைச் சடங்குகள் ஆகும். கரிசல் வட்டார மக்கள் இச்சடங்குகளை பயிர்வளம், மண்வளம், மழைவளம் முதலிய வேளாண்மைக்குரிய வளங்களைப் பெறவேண்டி செய்கிறார்கள்.

### வாழ்வியல் சடங்குகள்

பிறப்பு, பூப்பு, திருமணம் போன்ற மனித வாழ்வின் பல நிலைகளிலும் மேற்கொள்ளப்படும் சடங்குகளை வாழ்வியல் சடங்குகள் எனலாம். மனித வாழ்வில் நிகழ்த்தப்படும் சடங்குகள் அனைத்தும் அவர்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன என்பதை இச்சடங்குகள் புரியவைக்கின்றன.

### பிறப்புச் சடங்கு

குழந்தைப்பேறு முடிந்த பிறகு நடைபெறும் சடங்குகள் மனித வாழ்வில்இன்றியமையாததாக கருதப்படுகின்றன. குழந்தை பிறந்தவுடன் குழந்தையைக் குளிப்பாட்டி தாயின் அருகில் படுக்க வைக்கின்றனர்.

பிறந்த குழந்ததைகளுக்கு, நிறைய குழந்தைகளைப் பெற்று அத்தனை குழந்தைகளுக்கும் பாலூட்டி, இழப்பு இல்லாமல் வளத்த பெண்களையோ, பெருமையோடு வாழக்கூடிய ஆண்களையோ சேனைத் தொட்டு வைக்கச் செய்கின்றனர். 'ஓம்புத்திப்போயி எம்புத்தியா வா' என்று சேனைத் தொட்டு வைப்பவர்கள் சொல்கின்றன (Gnanasekaran, 2000).

### பூப்புச் சடங்கு

பெண்ணின் முதல் பூப்புக் காலத்தை தெரிவிக்கும் வகையில் நடைபெறுவது பூப்புச்சடங்கு பெண்ணானவள்இனவிருத்திக்கும், தாய்மைப் பேற்றுக்கும் தகுதியானவளாகிவிட்டாள் என்பதை அறிவிக்கும் அல்லது அறிமுகம் செய்யும் சடங்காகும். பெண்ணின் முக்கியத்துவம் இச்சடங்கின் மூலம் கூறப்படுகிறது.

### திருமணச் சடங்கு

ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக சமூகத்தில் இணைவது திருமணம். திருமணம் சார்ந்த சடங்கு முறை ஒவ்வொரு சாதிக்கும் மாறுபடுகிறது. சில சமூகங்களின் திருமண நிகழ்வில் செய்யப்படும் சடங்கு முறைகள் ஆழ்ந்தப் பொருளுடையனவாக இருக்கின்றன.

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் காரணம் என்ப'

என்னும் தொல்காப்பியம் கூற்றால், அவர் காலத்திற்கு முன்பே மனிதன் களவில் ஈடுபட்டு, இணைய மறுத்த நிலையில் திருமணம் என்ற நிலை தோன்றியுள்ளதைக் காணமுடிகிறது (Sasivalli, 2003).

### கரிசல் வட்டடார மக்களின் திருமணம்

கரிசல் வட்டார மக்கள் திருமண நிகழ்வில் பெண் பார்த்தல், சாதகம் பார்த்தல், நிச்சயம் செய்தல், பந்தக்கால் நடுதல், பரிசம் போடுவது முதலிய முறைகள் நடக்கின்றன. திருமணச் சடங்கில் இடம்பெறும் மஞ்சள் இடித்தல், இடுதல், மாலை மாற்றுதல், நலங்கு வைத்தல் முதலியவை இனச்செழிப்பை வேண்டும் சடங்கு முறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

### இறப்புச் சடங்கு

இறப்புக்குப் பிறகு மனிதர்கள் மறுபிறவி எடுப்பார்கள் என்றும், ஆவியாக கூடவே இருப்பார்கள் என்றும், தெய்வமாக மாறிப் பாதுகாப்பார்கள் என்றும் நம்புகின்றபடியால் இறப்புச் சடங்கை மக்கள் உணர்வுபூர்வமாக நடத்துகின்றனர்.

இறந்தாரை நீராட்டுதல், புத்தாடை உடுத்தல், வாயில் அரிசியிடுதல், உண்டு முடித்தவர்போல் வாயில் வெற்றிலைஇடுதல், நெற்றியில் நாணயத்தை வைத்தல் ஆகிய அனைத்துச் சடங்குகளும் பெரும்பான்மையான சாதியாரிடமும் ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன. (ஞானசேகரன், தே., 2000)

கரிசல் வட்டார மக்கள் பண்பாட்டில் இதுபோன்று பல்வேறு சடங்குகள் இறப்பிற்குப் பின் செய்யப்படுகின்றன. பிணத்தை கிடத்துதல், கன்னி கழித்தல், எரியூட்டல் அல்லது புதைத்தல், ஈமச்சடங்கு முதலியன கரிசல் மண்ணின் மக்களின் பண்பாட்டு வாழ்வு வெளிப்படுவதை கி.ராஜநாராயணன் படைப்புகள் புலப்படுத்தியுள்ளன (Rajanarayanan, 2007).

## திருவிழாக்கள்

மக்களின் பண்பாட்டு வாழ்வில் திருவிழாக்களும் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. திருவிழாக்களை மக்களை இணைக்கும் பண்பாட்டு கூறு எனலாம். கரிசல் வட்டார மக்கள் வாழ்வின் அம்மன் முதலிய சிறதெய்வங்கள் விழாவின் நாயகர்களாக விளங்குகின்றனர்.

## செல்லேரியம்மனுக்கு சாட்டு வைத்தல்

கரிசல் வட்டார மக்கள் வணங்கும் அம்மன், ஊருக்கு உள்ளேயும் எல்லையிலும் அமைந்திருக்கிறது. ஊருக்கு வெளியே அமைந்திருக்கும் செல்லேரியம்மனுக்கு ஒரு வாரம் வரைக்கும் விழா நடக்கிறது. ஊரில் எல்லையில் இருக்கும் கருப்பு, முனி முதலான சிறுதெய்வங்களின் சகோதரியாக இந்த அம்மனை கரிசல் வட்டார மக்கள் கருதிகிறார்கள். அம்மனுக்குச் செய்யப்படும் அனைத்து அபிசேகங்களும் அவளுடைய சகோதரர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடும் என்ற நம்பிக்கை உள்ளது.

'செல்லேரம்மனுக்கு எட்டு நாள் சாட்டு, பொங்கலன்னைக்கு சாட்டு வைத்து காப்பு கட்டிவிட்டால் அடுத்து எட்டாம் நாள் மயிலேறு பண்டிகை, பொங்கல் வைத்தல், கெடா வெட்டுதல், கூழ் வார்த்தல் எல்லாமே நடக்கும். பொங்கக் கூடைகளை அலங்கரித்துக் கொண்டு, மாவிளக்குத் தட்டுகளுடன் மேளதாளத்தோடு பொங்கல் களத்திலிருந்து உச்சி பொழுதுக்கெல்லாம் பொங்கல் வீடு வந்து விடும்.' என்ற வரிகளில் இப்பண்பாட்டுக் கூறு புலப்படுகிறது. (Rajanarayanan, 2007).

## மாரியம்மன் திருவிழா

ஊரில் மையத்தில் அமைந்திருக்கும் மாரியம்மனுக்கு செய்யப்படும் திருவிழாக்கள் கரிசல் வட்டார மக்களிடத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. இந்த அம்மனுக்கு விழா எடுக்கும் நாட்களில் தெருவுக்குத்தெரு தோரணங்கள், வாசலெங்கும் வண்ணக் கோலங்கள், புது நெல்லில் சமைத்த பொங்கல், வானவேடிக்கை, கரகாட்டம், இரவு முழுவதும் அம்மன் ஊர்வலம் என்று ஊர் மக்கள் மகிழ்ந்திருக்கின்றனர்.

## வழக்காறுகள்

மக்களின் பண்பாட்டுச் செயல்பாடுகளில் வழக்காறுகளும் இடம்பெறுகின்றன. வாய்மொழி வழக்காறுகள் எனக் கூறும்போது, உரைநடையாகவும், பாடல் வடிவத்திலும் வழங்கும் வழக்காறுகள் அடங்கும். உரைநடையில் குறுந்தொடர், வழக்காற்று வடிவங்களான பழமொழி, விடுகதை, நகைச்சுவை போன்றவையும் விவரிப்புத் தன்மையுடைய உரைநடைக் கதைகள் போன்றவையும் அடங்கும். வாய்மொழி வழக்காற்றில் அடங்கும் மற்றொரு வகைமைப் பாடலாகும். பாட்டு என்னும் இவ்வகைமைக்குள் பல்வேறு சூழல்களில் இயங்கும் சிறிய பாடல் வகைகளில் இருந்து நீண்ட கதைப் பாடல்கள் வரையிலான பல்வேறு வடிவங்கள் அடங்கும் (Lourde, 2010).

## முடிவுரை

கரிசல் வட்டார மக்களின் பண்பாட்டு வாழ்வில் நம்பிக்கைகளும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் பெற்றுள்ள இடமும், கரிசல் நில மக்களுடைய உணர்வு சித்தரிப்பாக அவை மாறும் தருணங்களும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது. பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வின் அத்தனை இடங்களிலும் கரிசல் நில மக்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டு அசைவியக்கங்கள் புலப்படுத்தப்பட்டுள்ளன.

## References


Bakthavatchala Bharathi, (2011) Panpattu Manudaviyal, Adayalam Pathippagam, Chennai, India.

Gnanasekaran, T (2000) Manthiram, Sadankukal, Samayam, Parthipan Pathippagam, Chennai, India.

Lourde, T. (2010) Nattar Valakatriyal, Nattar valakatriyal aivu maiyam, Palayamkottai, India.

Rajanarayanan, K. (2007) Ki. Rajanarayanan Kathaikal, Annam Pathippagam, Chennai, India.

Sasivalli, (2003) Tamilar Thirumanam, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramaniyan, S. (2014) Inavaraviyalum Tamil Navalum, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License